[Sri R. Venkataraman] [3rd September 1958

கனம் கலியாணசுந்தரம் அவர்கள் இதை பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்பவேண்டும் என்று திருத்தம் கொண்டுவந்தது எனக்கு ஆச்சரியத்தை உண்டு பண்ணியது. இந்தச் சட்டத்தை எவ்வளவு சீக்கிரமாகக் கொண்டு வந்து நிறைவேற்ற வேண்டும் என்று நினைக்கிறோமோ அவ்வளவு சீக்கிரமாகக் கொண்டு வரவேண்டும் என்று நினைத்தோம். ஆனால் அவர் பொறுக்குக் கமிட்டிக்கு கொண்டுபோகவேண்டும் என்று கேட்டது தான் எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. தொழிலாளர்களுக்கு அதிகமாக பாடுபடுகிறோம் என்று சொல்லக்கூடியவர், அதிலும் எங்களைவிட அதிகமாக தொழிலாளர்களுக்கு என்று பாடுபடுகிறோம் என்று சொல்லக்கூடியவர் இதை ஒத்திப்போடவேண்டும் என்று சொன்னதுதான் எனக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது. அவர் சொல்வது தவறு என்பதைக் காட்டுவதற்காகத்தான் அதற்கு நான் ஒத்துக்கொண்டேன். ஆகவே இந்தச் சட்டம் எவ்வளவு சீக்கிரத்தில் நிறைவேற்றப்பட்டு அமுலுக்குக் கொண்டு வரவேண்டுமோ அவ்வளவு சீக்கிரத்தில் நிறைவேற்றவேண்டும். அதற்காக எல்லோரும் இதை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொண்டு இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன்.

DEPUTY SPEAKER : The question is—

" That the Madras Industrial Establishments (National and Festival Holidays) Bill, 1958, be referred to a Select Committee to consider the Bill and report before the 10th September 1958 and that the following Members be elected to serve on such a Select Committee :—

1. The Hon. Sri R. Venkataraman.
2. Sri P. G. Karuthiruman.
3. ,, S. Lazar.
4. ,, T. T. Daniel.
5. ,, Urkavalan.
6. ,, J. Matha Gowder.
7. Srimathi Hemalatha Devi.
8. Sri D. Dasarathan.
9. Srimathi Rajathi Kunjithapatham.
10. Sri M. P. Sarathi.
11. ,, K. Ramachandran.
12. ,, S. A. M. Annamalai.
13. ,, K. Sattanatha Karalayar.
14. ,, S. Pakkirisami Pillai.
15. ,, V. K. Kothandaraman."

The motion was put and carried.

DEPUTY SPEAKER : I nominate the Hon. Sri R. Venkataraman to be the Chairman of the Select Committee.

(5) THE MADRAS CITY IMPROVEMENT TRUST (AMENDMENT) BILL, 1958.

DEPUTY SPEAKER : I suggest that we may sit for a few more minutes and finish the next Bill also, namely, the Madras City Improvement Trust (Amendment) Bill, 1958.

3rd September 1958]

Sri M. KALYANASUNDARAM : Some debate is necessary on the Bill. There are also amendments given notice of by hon. Members.

DEPUTY SPEAKER : Let the Hon. Minister first move the Bill. Then we will take up the amendments. 1-40 p.m.

The Hon. Sri R. VENKATARAMAN : Mr. Deputy Speaker Sir, I introduce the Madras City Improvement Trust (Amendment) Bill [a], 1958, and move—

'That the Bill be taken into consideration.'

In the City of Madras, slum improvement schemes are undertaken by the Corporation of Madras and the Madras City Improvement Trust Board. Slum Improvement Schemes undertaken by the Trust Board have to be sanctioned under the Madras City Improvement Trust Act (Madras Act XXXVII of 1950). Under sections 47 to 51 in Chapter III of that Act, every slum improvement scheme to be undertaken by the City Improvement Trust has to be published, like any other scheme of the Trust Board, in the *Fort St. George Gazette*, for eliciting objections, if any, to the proposed acquisition of lands and to the proposed improvement of the slum, and individual notices also have to be served on the occupiers. Further, the Corporation of Madras should also be consulted before implementing the scheme. The observance of these formalities takes a minimum of three months.

Both the Central and State Governments attach great importance to the speedy implementation of slum improvement schemes. A sum of Rs. 168 lakhs has been allocated to this State for slum improvement works during the Second Five-Year Plan period. The State Government are anxious to utilize the Plan provision of Rs. 168 lakhs fully. As the observance of the formalities laid down in Chapter III of the Madras City Improvement Trust Act, 1950, results in undue delay in the execution of slum improvement schemes by the City Improvement Trust, it is proposed to amend that Act by inserting a new section 69-A, empowering the Government to exempt, by notification, subject to such conditions and restrictions as may be specified in such notification, any improvement scheme or class of improvement schemes to be formulated and executed by the City Improvement Trust, from all or any of the provisions of Chapter III of the Act.

I request that the Bill be taken into consideration.

DEPUTY SPEAKER : Motion moved—

'That the Madras City Improvement Trust (Amendment) Bill, 1958, be taken into consideration.'

---

[a] Published in the *Fort St. George Gazette*, dated the 30th July 1958.

[3rd September 1958

SRI M. KALYANASUNDARAM : Sir, I am not moving my amendment to refer the Bill to a Select Committee.

DEPUTY SPEAKER : Now, the motion is before the House for discussion.

* SRI K. VINAYAKAM : Mr. Deputy Speaker, Sir, the work of clearing slums in the City of Madras is now being attended to more by the City Improvement Trust than by the City Corporation. Wonderful work is being turned out by the City Improvement Trust. They have cleared slums in the South to a large extent. They have floated new buildings which are occupied by Low Income Groups who can own them after a lapse of 20 years. Their work is now being hampered to a large extent by following formalities like serving notices to individual owners and receiving objections from neighbouring people or people who are not interested in this scheme. These naturally involve considerable delay.

Now I would like to bring it to the notice of this House through you, Sir, that the Puliyur Scheme is now being worked out by the City Improvement Trust. They have now completed the first and second parts of the scheme. They have constructed nearly 300 good houses which are now being occupied by low income groups. Recently, they have advertised for applicants for the occupation of 170 houses that are being built in the various parts of the City. Sir, I may inform this House that not less than 3,000 applications have reached the Office of the City Improvement Trust. That shows the incentive created in the common man, in the ordinary man to own a house. He wants to own a house before he leaves this world. How long can the people live in the rented houses in the City of Madras? This kind of important work should not be hampered by the official routine procedures like notifying the scheme in the Gazette and then inviting objections from the people. Naturally, Sir, people who are not interested in this scheme will put all sorts of inconceivable impediments in the execution of the scheme. For instance, the third part of the Puliyur scheme has not been implemented. Even the Central Government have allotted money. The Madras Government also have given loans to the City Improvement Trust. But there is a great snag involved in putting this scheme into operation. The whole area has not been surveyed and this process has involved undue delay. I have been thinking for a long time why we should follow this kind of cumbersome procedure which ultimately results in the delayed realization of our objects. The very fact that 3,000 applications reached the Trust Office for allotment of 170 houses which may be built during the course of six months, will show beyond any reasonable doubt that there is a great clamour for small houses in the City. Therefore, this kind of delayed process like referring the Bill to a Select Committee and awaiting their report—even though it may be only ten days—is not in the interest of the people. I congratulate the Government on bringing forward this kind of Bill which will do away with all these

3rd September 1958] [Sri K. Vinayakam]

formalities. Otherwise, it will give more scope for lawyers to quibble, and the owners to obtain stay orders from Courts, which naturally means unusual delay. All these things will be done away with by the passing of this Bill. I commend this Bill for the acceptance of this House immediately without referring it to a Select Committee.

DEPUTY SPEAKER : The motion to refer the Bill to a Select Committee has not been moved by the hon. Member Sri Kalyanasundaram.

SRI S. PAKKIRISAMI PILLAI : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நான் அதிகம் பேசுவதற்கு இஷ்டப்படவில்லை. சென்னை நகரத்தை இரண்டு பாகமாகப் பிரித்து, கூவம் நதிக்குத் தெற்கே இருக்கும் பகுதியை ஸிட்டி இம்ப்ரூவ்மெண்ட் ட்ரஸ்டு அபிவிருத்தி செய்யவேண்டுமென்றும், வடக்கே இருக்கும் பகுதியை கார்ப்பரேஷன் அபிவிருத்தி செய்ய வேண்டுமென்றும் ஒரு வழி வகுத்து, அதன்படி அபிவிருத்திகள் நடந்து கொண்டிருக்கின்றன. அம்மாதிரியான நிலையிலே ஸிட்டி இம்ப்ரூவ்மெண்ட் ட்ரஸ்ட்டானது அனேக வேலைகளை துரிதமாக நடத்திக்கொண்டே போகிறார்கள். அதனால், சென்னை நகரத்தின் தென் பகுதி நியாயத்திற்குப் புறம்பாக அதிகமாக அபிவிருத்தியடைந்து கொண்டிருக்கிறது. ஆனால், வடக்குப் பகுதி மிகவும் கேவலமான நிலையிலேயே இருந்து கொண்டிருக்கிறது. காரணம், கார்ப்பரேஷன் அதிகாரிகள் தங்களுடைய சட்டத்தை முன்னாலே வைத்துப் பார்த்துக்கொண்டிருப்பதுதான். எந்த அபிவிருத்தி வேலையானாலும் சரி, கார்ப்பரேஷன் அதிகாரிகள் வெவ்வேறு சட்டத்தைக் காண்பித்து, தங்களுடைய நடவடிக்கையை தாமதப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஸிட்டி இம்ப்ரூவ்மெண்ட் ட்ரஸ்டுக்கு இருக்கும்படியான விதிகளை கார்ப்பரேஷன் அதிகாரிகளால் அனுஷ்டிக்க முடியவில்லை. அவர்கள் வேறு விதி வைத்துக் கொண்டு அதன் மூலமாகத்தான் நடத்திக்கொண்டு போகிறார்கள். ஆகவே, சென்னை நகரம் முழுதுக்கும் ஸிட்டி இம்ப்ரூவ்மெண்ட் ட்ரஸ்டே இருந்தாக வேண்டுமென்ற விதியை இங்கே நான் வற்புறுத்தக் கடமைப் பட்டிருக்கிறேன். அதற்குண்டான வழியை வகுக்க வேண்டுமென்று கனம் மந்திரி அவர்களையும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

வடக்குப் பகுதியிலே இருக்கும்படியான பாகங்கள் எந்த வழியிலேயும் அபிவிருத்தி அடையவில்லை. 1957-ம் வருஷத்திலே ஆறு சேரிகளை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்ற திட்டம் கார்ப்பரேஷன மத்தியிலே கிளம்பியது. ஆனால், 1958-வது வருஷம் முடியும்போது கூட இன்னும் ஒரு சேரியைக் கூட அபிவிருத்தி செய்யவில்லை. காரணம், அங்கே சட்டங்கள் இடையூறாக இருந்து கொண்டிருக்கின்றன. அந்தச் சட்டங்களைப் பார்த்துக் கொண்டு தான் கார்ப்பரேஷன் அதிகாரிகள் நடந்துகொண்டு போகிறார்களே தவிர, உண்மையிலேயே மக்களுக்கு வீட்டு வசதிகளை அதிகமாக ஆக்கிக்கொடுக்க வேண்டுமென்ற எண்ணம் இல்லை என்பதை நாம் நன்றாகத் தெரிந்து கொண்டிருக்கிறோம். ஆகவே, கார்ப்பரேஷனுக்கு இருக்கும்படியான அதிகாரத்தை எடுத்து ஸிட்டி இம்ப்ரூவ்மெண்ட் ட்ரஸ்டுக்கே கொடுப்பது மேல் என்று நான் தெரிவித்துக்கொண்டு என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்ளுகிறேன்.

SRI M. KALYANASUNDARAM : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவில் இருக்கும் திருத்தத்தை ஆதரிப்பதில் எனக்கு ஆட்சேபணை இல்லை. சென்னை நகரத்தில் சேரி அபிவிருத்தி துரிதமாக நடைபெற வேண்டும் என்பதில் அக்கறையுள்ளவன்தான் நான். இருந்தாலும் நகர அபிவிருத்தியின் பெயரால் ஏற்கனவே குடியிருக்கக்கூடிய ஜனங்களை அப்புறப்படுத்துவதில் சங்கடம் ஏற்படுவதால் கொஞ்சம் நிதானமாகப் போக வேண்டும் என்பதற்காகத்தான் திருத்தம் கொடுத்திருக்கிறேன். புதிய திட்டங்களை போட்டு நகரத்தை அபிவிருத்தி செய்ய

1–50 p.m.

வேண்டுமென்ற நோக்கத்தோடு ஏற்கெனவே குடியிருக்கக்கூடிய மக்களது குடிசைகளைப் பிரித்தெறிகிற வேலை அவசரம் அவசரமாக மேற்கொள்ளப்பட்டு விடுகிறதைப் பார்க்கிறோம். சில பணக்காரர்களின் சுய நலத்தினாலும் அப்படிப்பட்ட பாதகம் இழைக்கப்படுகின்றது. ஆகையால் சர்க்கார் விதிவிலக்குக் கொடுப்பதில் கொஞ்சம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டுமென்பதற்காகத்தான் நான் திருத்தம் கொடுத்திருக்கிறேன். விதிவிலக்கு சர்க்கார் கொடுக்க வேண்டுமென்றால் சம்பந்தப்பட்ட ஜனங்கள் எப்படி இருக்கிறார்கள் என்பதைப் பார்த்து வழிவகை செய்ய வேண்டும். அசல் சட்டத்தை எடுத்துப் பார்த்தாலும் விதி இருக்கிறது. அதோடு மெட்ராஸ் ஸிட்டி இம்ப்ரூவ்மெண்டு ஆக்டின் கீழ் சர்க்கார் வெளியிடக் கூடிய விதிகளைப் பிரசுரிக்க வேண்டுமென்றும் சட்டத்தில் இருக்கிறது. இவையெல்லாம் ஏற்கெனவேயே அங்குள்ள மக்களுக்கு எவ்விதமான பாதகமும் அவசரப்பட்டுக் கொண்டு இழைத்துவிடக்கூடாது என்பதற்காகத் தான். இப்போது சட்டத்தில் நாம் திருத்தம் செய்யும்போதும் அங்குள்ள மக்களது கஷ்ட நஷ்டங்களை கவனித்து ஆட்சேப சமாதானங்களைத் தீர்க்க வழி இருக்கவேண்டும். அதற்காக இந்த இரண்டாவது பிரிவு ப்ரொவைஸோவாகச் சேர்க்கவேண்டும் என்று ஒரு திருத்தம் கொடுத்திருக்கிறேன். மந்திரி அவர்கள் இது சம்பந்தமாக என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசித்திருக்கிறார்கள் என்பதை நன்கு விளக்கமாகச் சொன்னால் இந்தத் திருத்த மசோதாவை ஆதரிப்பதில் எனக்கு எவ்வித ஆட்சேபணையும் கிடையாது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

Sri K. ANBAZHAGAN: உதவி அவைத் தலைவர் அவர்களே, சென்னை நகர சேரிகளின் அபிவிருத்தி வேலை ஒரு பகுதி கார்ப்பரேஷனிடமும், மற்றொரு பகுதி டிரஸ்டிடமும் ஒப்படைக்கப்பட்டு நடைபெற்று வருவதைக் கண்டு உண்மையில் சென்னை நகர மக்கள் பாராட்ட வேண்டும். ஆனால் அவ்வாறு பாராட்டப்படாமல் இருப்பதற்குக் காரணம் நகர அபிவிருத்தியின் பேரில் பலபல பகுதிகளில் வாழ்கின்ற மக்களுக்குத் தொந்தரவுகள் அதிகம் ஏற்பட்டுக் கொண்டிருப்பதும், சேரிகளைப் புனர் நிர்மாணம் செய்வது என்பதன் பெயரால் அங்குள்ள குடிசைகள் பிரித்தெறியப்படுவதும், மழையிலும் வெய்யிலிலும் தாங்கள் திண்டாடிக் கொண்டிருப்பதை அரசாங்கம் கவனிக்கும் என்கிற நம்பிக்கை இல்லாத காரணத்தினாலும் சேரியில் வாழ்கிற மக்கள் இன்றைக்கு பாராட்டாமல் இருக்கிறார்கள். மிகவும் மன வேதனை அடைந்து துன்பப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். சென்னை நகரத்தில் பல தடவைகள் சேரியில் வாழ்கிற மக்கள் அப்புறப்படுத்தப்பட்டு மாற்று வசதி எதுவும் அவர்களுக்குச் செய்யப்படாமல் இருந்திருக்கிறது. வேறு ஓரிடத்தில் தங்குவதற்கும் வாய்ப்புப் பெறாமல், குடிசைகளைக் கட்டிக்கொள்வதற்கும் வசதி இல்லாதவர்களாக, அரசாங்கம் கட்டித் தரும் என்கிற நம்பிக்கையும் இல்லாதவர்களாக, வேலை வாய்ப்பையும் இழந்து பரிதபித்திருக்கிறார்கள். இதுபற்றி முதல் அமைச்சரிடமும் தெரிவிக்கப்பட்டது. முதல் அமைச்சர் அவர்களும் வழக்கம் போல கவனிக்கிறேன் என்று சொன்னார்கள். ஆனால் கவனிக்கவில்லை. ஆகவே இந்த சென்னை நகர அபிவிருத்தித் திட்டம் சென்னை நகரத்தில் சேரிகளில் வாழ்கிற மக்களைத் துன்புறுத்துகிற திட்டமாக மாறியிருக்கிறதென்பதை நான் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மற்றொன்று, நகர அபிவிருத்தி சம்பந்தமாக மத்திய சர்க்காருடைய சில கருத்துக்களைச் செய்தித் தாள்களில் பார்த்தேன். அந்தக் கருத்துக்களின்படி அங்குள்ள மக்களது வேலை வாய்ப்புக்கள் கெட்டுப் போகாமல், அவர்கள் வேலை செய்கிற இடங்களுக்குப் பக்கத்திலேயே மாற்று இடம் கொடுப்பதற்கு இடம் இருக்கிறதா என்பதைப் பார்த்துக் கொண்ட பின்பு தான் இருக்கிற சேரிகளை மாற்றியமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சென்னை நகரச் சேரிகளைப் பொறுத்த வரையில் சேரி அபிவிருத்தியோடு அங்குள்ள மக்களது வேலை வாய்ப்புகளையும், அபிவிருத்தி மந்திரி அவர்களே தொழில் மந்திரியாகவும் இருப்பதனால் சேர்த்து கவனித்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மூன்றாவதாக சேரி அபிவிருத்தி விஷயத்தில் இப்போது அதிகக் காலதாமதம்

3rd September 1958] [Sri K. Anbazhagan]

ஆகிறதாகவும், தாமதத்தைப் நிவர்த்திக்க இந்தத் திருத்த மசோதாவைக் கொண்டுவந்திருப்பதாகவும் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். சேரிகளின் புனர் அமைப்பு விஷயத்தில் எவ்வளவு அக்கறை எடுத்துக்கொள்கிறார்களோ அவ்வளவு அக்கறை, அதையும் விட அதிகமான கவனம் இருக்கிற சேரிகளைச் சீர்த்திருத்தம் செய்வதற்கும் எடுத்துக்கொள்ளவேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக என்னுடைய பகுதி எழும்பூர் ஏரியாவில் உள்ள செக்குமேடு என்ற சேரியில் இருக்கும்படியான கஷ்டங்களையும் நாற்றத்தையும் எடுத்து மந்திரி அவர்களுக்குச் சொன்னேன். அங்குள்ள மக்களின் பொது சுகாதாரத்தை உத்தேசித்து எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. தனிப்பட்டவர்களுடைய நிலத்தில் அந்தச் சேரி அமைந்திருப்பதனால் உடனடியாக நடவடிக்கை எடுப்பது சாத்தியமாக இல்லையென்று அமைசசர் அவர்கள் சொன்னார்கள். இது சரியல்ல. தனிப்பட்டவர்களுடைய நிலத்தில் அமைக்கப்பட்டிருக்கும் சேரிகளின் பொது சுகாதாரத்திலும இவர்கள் அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன். அவற்றிலுள்ள குப்பை கூளங்களை அப்புறப்படுத்துவதில் கார்ப்பரேஷன் பொறுப்பு ஏற்கவேண்டும். உடனடியாக அவற்றைச் சீர்திருத்தம் செய்யக் கட்டாயப் படுத்த வேண்டும்.

மற்றொன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். சென்னை நகரை வடக்கு தெற்கு என்று பாகுபாடு செய்து வடக்கு சென்னையைக் கார்ப்பரேஷனிடத்தில் ஒப்படைத்து, தெற்கு சென்னையை இம்ப்ரூவ்மெண்டு டிரஸ்டிடம் ஒப்படைத்து இன்று நிர்வாகம் நடைபெற்று வருகிறது. இது சரியல்ல. வேண்டுமானால் சேரிகளின் புனர் நிர்மாணம் சம்பந்தமாக முழுப் பொறுப்பையும் சென்னை நகரம் முழுவதற்கும் டிரஸ்டிடம் ஒப்படைக்க வேண்டும். சேரிகளின் சீர்திருத்தம், பொது சுகாதாரம் இவற்றை சென்னை நகரம் முழுவதற்கும் கார்ப்பரேஷனிடம் பொறுப்பை ஒப்படைத்துவிட வேண்டும். இப்படி வேலை பாகுபாடு செய்ய வேண்டுமே தவிர வட சென்னை, தென் சென்னை என்பதாகப்பிரித்து ஒன்றுக்கு கார்ப்பரேஷனும், மற்றொன்றுக்கு டிரஸ்டும் என்று பொறுப்பு கட்டினால் வேலை சரிவர இரண்டு பகுதியிலும் ஒன்றாக நடைபெறாது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே சேரிகளைச் சுத்தப் படுத்துகிற பொறுப்பு முழுவதையும் சென்னை நகரம் பூராவுக்கும் கார்ப்பரேஷனிடம் விட்டுவிட வேண்டும். அதுமாதிரி சேரி புனர் அமைப்பு, வேறிடத்தில் கட்டுகிறது ஆகியவற்றை டிரஸ்டிடம் கொடுக்க வேண்டும் என்கிற கருத்தை வலியுறுத்தி அமைச்சர் அவர்களையும் இப்படிச் செய்தால் அதிகப்பயன் ஏற்படும் என்று கேட்டுக்கொண்டு இம்மசோதாவை வரவேற்கிறேன். இந்தத் திருத்த மசோதாவில் நான் குறிப்பிட்ட கருத்துக்களும் இடம் பெற வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன்.

Sri V. K. RAMASWAMY MUDALIYAR : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்தத் திருத்த மசோதாவின் பேரில் இரண்டொரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். முக்கியமாக ஸிடி இம்ப்ரூவ்மெண்டு டிரஸ்டு நல்ல முறையில் வேலை செய்துகொண்டு வருகிறது. சேரி ஒழிப்புத் திட்டத்தில் அதிக கவனம் செலுத்தி அவைகளை நல்ல முறையில் எவ்வளவு சுத்தமாக இருக்கும்படியாகச் செய்ய முடியுமோ அவ்வளவு சுத்தமாக வைத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதற்குப் பாராட்டுகிறேன். அதோடு இந்தத் திருத்தங்களை உடனே அமுலுக்குக்கொண்டு வருவதானால் அநேகம் இடங்களில் சில பேருக்கு அதிகக் கஷ்டம் உண்டாகுமோ என்று பயப்படுகிறேன். அதோடு நானே பார்த்திருக்கிறேன், திடீரென்று சேரி அபிவிருத்தி என்று ஒரு பகுதியில் உள்ள குடிசைகளை எல்லாம் பிரித்து எறிந்து விடுவது. அதனால் அதிகமான மக்கள் கஷ்டப்படுவது இயற்கை. அப்படியில்லாமல் போதுமான நோட்டீஸ் கொடுத்து, குடிசைகளைப் பிரிப்பதற்கு முன்பாக மாற்று இடம் அவர்களுக்குக் கொடுத்து அப்புறப்படுத்தவேண்டும் என்பதாகக் கேட்டுக்

[Sri V. K. Ramaswamy Mudaliyar] [3rd September 1958

கொள்கிறேன். தவிர ஒரு இடத்தில் சேரியை ஒழிக்க இவர்கள் முயலும் போது அநேக இடங்களில் புதிதாகச் சேரிகள் உண்டாகிக் கொண்டும் இருக்கிறது. புதுச் சேரி அமைந்தவுடன் சர்க்கார் அவற்றை ஒழிக்க நடவடிக்கை எடுப்பதைவிட புதுச் சேரி உண்டாகாமல், உண்டாகும்போது நல்ல முறையில் அவை அமைவதற்குச் சர்க்கார் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். சேரி ஒழிப்புத் திட்டம் முக்கியமானது. நகரம் பலவகையிலும் அபிவிருத்தி அடையத்தான் வேண்டும். அதற்காக ஏழை மக்கள் துன்பப்படும்படியாக விடக்கூடாது. ஏழை மக்களுக்கு எவ்வித தொந்தரவும், கஷ்டமும் ஏற்படாத முறையில் இந்தத் திட்டத்தை அமுல் நடத்த வேண்டும் என்பதாகக் கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்தத் திருத்தச் சட்டத்தைக் கொண்டு வர வேண்டியதன் அவசியத்தை முன்பே குறிப்பிட்டேன். இப்போது இருக்கிற சட்டத்தில் சொல்லப் போனால் செக்ஷன் 47-ல் இருந்து 51 வரையில் உள்ளவற்றினால் சேரி ஒழிப்பு சம்பந்தமாக நாம் துரிதமாக நடவடிக்கை எடுத்துக்கொள்ள முடியாமல் ப்ரொஸிஜரல் மாட்டர்ஸ் என்கிற முறையில் காலதாமதம் ஆகிறது. இதனால் அபிவிருத்தி வேலைகளே தடைபடுகிறது. முதலில் நோட்டீஸ் கொடுக்க வேண்டும். பிறகு கார்ப்பொரேஷனுக்கு 90 நாட்கள் நோட்டீஸ் கொடுக்க வேண்டும். அதற்குப் பிற்பாடு மறுபடியும் 30 நாட்கள் நோட்டீஸ் கொடுக்க வேண்டும். இவ்வாறு நோட்டீஸுக்கு மேல் நோட்டீஸ் கொடுத்துக்கொண்டிருந்துவிட்டு பிறகு சேரி ஒழிப்புத் திட்டத்தை நிறைவேற்றுவது என்றால், திட்டத்திற்கான "அல்லாட்மெண்டே" போய்விடுகிறது ; அந்தப் பணமே "லாப்ஸ்" ஆகும் நிலைமை ஏற்பட்டுவிடுகிறது. ஆகையால்தான் இந்த ஷரத்துக்களினின்றும் தனி நபர்கள் யாருக்கும் விலக்குக் கொடுக்கவில்லை. சட்ட ரீதியான ஸ்தாபனமாகிய (ஸ்டாசுடரி பாடி) நகர அபிவிருத்தி டிரஸ்டுக்கு சர்க்கார் விதிவிலக்கு அளிக்கலாம் என்னும் திருத்தத்தைக் கொண்டுவந்திருக்கிறேன்.

சேரிகளைப்பற்றி பேசப்பட்டது. சில சேரிகளில் இருப்பவர்களை அவைகளினின்றும் அப்புரப்படுத்துகிறோம். இவ்வாறு செய்வதால் சேரிகளைப் பிரித்தெறியும் காரியம் செய்யப்படுகிறது என்று ஸ்ரீ அன்பழகன் கூறினார். அதற்கு பதில், கனம் எதிர் கட்சித் தலைவர் கூறியது தான். 1957-ம் வருஷத்திய குறிப்பிட்ட தேதிக்குப் பின்னர் போடப்பட்ட சேரிகளிலுள்ளவர்களை அப்புரப்படுத்தினால், நாங்கள் அவர்களுக்கு மாற்று இடம் கொடுப்பதில்லை ; அவர்கள் போட்டுள்ள சேரிகள் சட்ட விரோதமாகப் போடப்பட்டவையாக இருந்தால், அதைப் பிரித்தெறிய வேண்டிய துர்ப்பாக்கியமான கடமை சர்க்காருக்கு இருக்கிறது. இதற்குக் காரணம் கூறுகிறேன். உதாரணமாக, கோடை காலத்தில் வியாசர்பாடியில் தண்ணீரில்லாத குளங்களில் மக்கள் சேரிகளைப் போட்டுக்கொண்டு விடுகிறார்கள். அவர்கள் சேரிகளைப் போட்டுக்கொண்டு அங்கே குடியேறிய பிறகு நான்கு, ஐந்து மாதங்களில் மழை காலம் வந்து விடுகிறது. குளங்களில் தண்ணீர் வந்துவிடுகிறது. அப்போது அவர்கள் பக்கத்திலுள்ள பள்ளிக்கூடங்களில் புகுந்து கொண்டு சாப்பாடும் போட வேண்டுமென்று சொல்கிறார்கள். அந்த நிலையில் அந்தப் பள்ளிக்கூடங்களில் பிள்ளைகளுக்கும் படிக்க முடிவதில்லை. ஆகவே, பள்ளமான இடங்களில் (லோ-லையிங் ஏரியாஸ்), அனுமதிக்கப்படாத இடங்களிலும் (அன்ஆதரைஸ்ட் பிளேஸஸ்) சேரிகள் போடப்பட்டால், அவைகளைப் பிரித்துவிட வேண்டுமென்று ஒரு விதி இருக்கிறது. ஆனால், 1957-ம் வருஷத்திய குறிப்பிட்ட தேதிக்கு முன்னர் போடப்பட்டுள்ள சேரிகளினின்றும் அப்புரப்படுத்தப்படுபவர்களுக்கு வேறு இடங்கள் கொடுக்கிறோம்.

சேரிகளுக்குத் திருத்தம் செய்யும் விஷயத்தில், சர்க்கார் நிலங்களிலுள்ள சேரிகளுக்கு நாமே நன்றாகத் திருத்தம் செய்துவிட முடிகிறது. ஆனால் சர்க்கார் நிலங்களில் இல்லாவிட்டால்—தனிபட்டவர்களின் நிலங்களில் இருந்தால் – நாங்கள் எதுவும் செய்ய முடிவதில்லை. ஏனென்றால் கார்ப்பொரேஷன் விளக்குப் போடுவதைக்கூட அவர்கள் தடுக்கிறார்கள்.

3rd September 1958] [Sri R. Venkataraman]

அவர்கள் “இங்கே பள்ளமாக்கக்கூடாது, அங்கே லைன்ஸ் போடக் கூடாது” என்று சொல்லுகிறார்கள். இப்போதிருக்கும் சட்டப்படி, இப்படிப் பட்ட நிலங்களின் சொந்தக்காரர்களான தனி நபர்கள் இத்தகைய காரியங்களைத் தடுத்தால், அப்போது சர்க்கார் ஒன்றும் செய்ய முடியாது ; சர்க்காராக இருந்தாலும்கூட சட்டத்திற்குட்பட்டுத்தான் நடக்க வேண்டியிருக்கிறது. ஆகையால் தனி நபர்களின் நிலங்களிலுள்ள சேரிகளை அபிவிருத்தி செய்வது மிகவும் கஷ்டமாக இருக்கிறது.

இன்னும் சில இடங்களில், சேரி அபிவிருத்தி வேலைகளை நாங்கள் திட்டம்போட்டு செய்கிறோம். சேரி ஒழிப்பு என்று சொல்லிக்கொண்டு புதிய சேரிகளை உண்டாக்குவதில் பிரயோஜனமில்லை. சேரிவாழ் மக்களுக்கு நல்ல முறையில் வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டுமானால், ஒவ்வொரு வீடும் குறைந்தபட்சம் 800 சதுர அடி நிலத்தில் அமைய வேண்டும். இந்த அடிப்படையில் நாங்கள் சேரிகளை சீர்திருத்தும் வேலையைச் செய்யும்போது சில சேரிகளில் இருக்கும் பெரும்பான்மையான மக்கள் அந்த இடங்களை விட்டு வேறு இடங்களுக்குச் செல்ல வேண்டும். அவ்வாறு அவர்கள் சென்றால்தான் உள்ள சேரிகளும் திருத்தமடைகின்றன, அவர்கள் குடியேறும் புதிய இடங்களும் அபிவிருத்தியடைகின்றன. இந்தத் திட்டத்தை அமல் நடத்தும்போது, அவர்களில் பலர் தாங்கள் இருக்கக்கூடிய சேரிகளைவிட்டு வெளியேற மறுக்கிறார்கள். இதன் காரணமாகவும், சேரி அபிவிருத்தித் திட்டம் தடைப்படுகிறது.

சேரிகளில் அபிவிருத்தித் திட்டத்தை நிறைவேற்றுவதில், சென்னை நகரத்தில் இருக்கும் சட்ட சபை அங்கத்தினர்கள் எல்லோரும் சர்க்காருடன் ஒத்துழைக்க வேண்டுமென்று அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். அவர்கள், தங்கள் தொகுதிகளில் இருக்கும் சேரிகளுக்குச் சென்று அங்குள்ள மக்களிடம், சேரிகள் மாற்றியமைக்கப்பட்டால் அவர்களுக்கு எவ்வளவு நன்மை ஏற்படும் என்பதை விளக்கிக் கூறவேண்டும். இப்போது புதிய சேரிகள் தோன்றாமலிருப்பதற்கு வகை செய்யும் சட்டம் இருக்கிறது. புதிதாக Unauthorized huts போட்டாலும் சரி, அனுமதிக்கப்படாத இடங்களில் சேரிகள் போட்டாலும் சரி, இவைகளை சர்க்கார் பிரித்துவிடுவார்கள்.

கடைசியாக, மிகவும் திட்டவட்டமாக ஒன்று சொல்ல விரும்புகிறேன். சென்னையில், பல சேரிகளில் வசிப்பவர்களிடையே, தாங்கள் குடியிருக்கும் நிலங்களை சேரி ஒழிப்பு திட்டத்தின்கீழ் தங்களுக்கு ஆர்ஜிதம் செய்துவிடுவார்கள் என்ற தவறான அபிப்பிராயம் நிலவி வருகிறது. அதனால்தான் அவர்கள் அந்த இடங்களை விட்டு வேறு இடங்களுக்குச் செல்ல மறுக்கிறார்கள். தாங்கள் குடியிருக்கும் நிலங்களை சர்க்கார் விலை கொடுத்து வாங்கி தங்களுக்கே விலைக்கு கொடுத்துவிடுவார்கள் என்று அவர்கள் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். சர்க்கார் அவ்வாறு செய்யப் போவதில்லை. இதை அவர்கள் உணர்ந்துகொண்டுவிட்டால், திட்டம் நிறைவேறுவதற்கு அவர்களுடைய ஒத்துழைப்பு நன்றாக கிடைக்கும்.

சேரிகள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், சேரிவாழ் மக்களுக்கு வட சென்னையில் 20 லட்சம் ரூபாய் செலவில் 800 வீடுகளும், தென் சென்னையில் 20 லட்சம் ரூபாய் செலவில் 800 வீடுகளும் கட்டிக் கொடுக்கப் போகிறோம். இது தவிர, சேரிகள் உள்ள நிலங்களில் 800 சதுர அடிக்கு ஒரு வீடு வீதம் வீடுகள் கட்டி, அவைகளை அந்தப் பிரதேசங்களில் முன்பு இருந்தவர்களில் எத்தனை பேர்களுக்குக் கொடுக்க முடியுமோ அத்தனை பேர்களுக்குக் கொடுத்துவிட்டு, மற்றவர்களுக்கு வேறு இடங்களில் வீடுகள் கொடுப்போம். ஆகையால், இந்தத் திட்டத்தின் கீழ் யாருக்கும் நிலம் கிடைக்காது, குடக்கூலிக்கு இருக்கக்கூடிய நிலம் தான் கிடைக்கும். இதை சேரிவாழ் மக்கள் எல்லோரும் உணர்ந்துகொண்டுவிட்டால் நாம் செய்யும் முயற்சி வெற்றியடையும்.

[Sri R. Venkataraman] [3rd September 1958

சேரி ஒழிப்பு வேலையில் தவறுகளோ, குறைகளோ இல்லாமலிருக்க முடியாது. சில இடங்களை திட்டத்தின்கீழ் கொண்டுவரும்போது, நியாயமான முறையிலும் நியாயமற்ற முறையிலும், தங்களுக்கு இந்த இடங்களில் உரிமைகள் இருக்கின்றன என்று கூறி திட்டத்திற்குத் தடை செய்கிறார்கள். இதையெல்லாம் கவனித்து திட்டத்தை நிறைவேற்றவேண்டியிருக்கிறது. இந்தச் சட்டத்தை கொண்டுவருவதால திட்டம் காலதாமதமாவது நின்றுபோகும்.

அடுத்தபடியாக, திட்டத்திற்காக எடுத்துக்கொள்ளப்படவிருக்கும் நிலங்களில் இருக்கும் சேரிவாழ் மக்களுக்கு அந்நிலங்களை திட்டத்திற்கு எடுத்துக்கொள்வது குறித்து ஏதாவது ஆட்சேபணைகள் இருந்தால், அவைகளை அவர்கள் கூறிக்கொள்வதற்கு வகை செய்யவேண்டும் என்று ஸ்ரீ கல்யாணசுந்தரம் சொன்னார். இப்போது, ஒரு இடத்தை அபிவிருத்தித் திட்டத்திற்கு எடுத்துக்கொள்வதாக இருந்தால், நகர அபிவிருத்தி டிரஸ்டார் நோடிபிகேஷன் போடுகிறார்கள். அந்த இடங்களிலுள்ளவர்கள் தங்களுக்கு இருக்கக்கூடிய ஆட்சேபணைகளை நகர அபிவிருத்தி டிரஸ்டுக்கு அனுப்புகிறார்கள். நாம் இப்போது அவர்களுடைய ஆட்சேபணைகளைப்பற்றி கவனிக்க வேண்டியதில்லை. அவர்களுடைய ஆட்சேபணைகளை கவனிப்பதற்கு ட்ரிப்யூனல்கள் இருக்கின்றன. கார்ப்பொரேஷனுக்கு 90-நாட்கள் நோட்டீஸ் கொடுக்கப்படவேண்டும் என்பதற்கும், அதற்குப் பிறகு 30 நாட்கள் நோட்டீஸ் கொடுக்கவேண்டும் என்பதற்கும்தான் சர்க்கார் இப்போது அதிகாரம் எடுத்துக்கொள்ளுகிறது. ஆகவே சம்பந்தப்பட்ட சேரிவாழ் மக்கள் தங்கள் ஆட்சேபணைகளைத் தெரிவித்துக்கொள்ளும் விஷயத்தில், அவர்களுக்கு இப்போதுள்ள சலுகைகள் இந்தச் சட்டத்தினால் பாதிக்கப்படாது என்று தெரிவித்துக்கொள்வதுடன், இந்த மசோதாவை நிறைவேற்றிக் கொடுக்கவேண்டுமென்றும் கனம் அங்கத்தினர்களைக் கேட்டுக்கொண்டு என் வார்த்தையை முடித்துக்கொள்ளுகிறேன்.

DEPUTY SPEAKER: The question is :—

"That the Madras City Improvement Trust (Amendment) Bill, 1958, be taken into consideration".

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clause 2 was put and carried.

Clause 1 and the preamble were put and carried.

THE HON. SRI R. VENKATARAMAN: Sir, I move that the Madras City Improvement Trust (Amendment) Bill, 1958, be passed.

DEPUTY SPEAKER: The question is:

"That the Madras City Improvement Trust (Amendment) Bill, 1958, be passed".

The motion was put and carried and the Bill was passed.

DEPUTY SPEAKER: The House will now adjourn and meet again at 9 a.m. to-morrow.

The House then adjourned.